செய்தி வெளியீடு எண். 56 நாள்: 27.01.2018

**மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித் அவர்கள் கொடிநாள் நிதி அதிகளவில் வசூல் செய்த திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்களுக்கு இரண்டு சுழற் கோப்பைகளை வழங்கினார்**

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் (ராஜ்பவன்) 26.01.2018 அன்று மாலை நடைபெற்ற குடியரசு தினவிழா தேநீர் விருந்து உபசரிப்பு நிகழ்ச்சியின் போது 2016-ம் ஆண்டு (07.12.2016 – 06.12.2017) கொடிநாள் நிதி வசூலில் ரூ.3,42,46,500 (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்து இரண்டு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்தி ஐந்நூறு மட்டும்) வசூலித்து மாநில அளவில் தொகையின் அடிப்படையில் முதலிடத்தை பிடித்தமைக்கும், சதவிகித அடிப்படையில் மாநில அளவில் இரண்டாவது இடத்தினை பிடித்ததற்கும் இரண்டு சுழற் கோப்பைகளை மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித் அவர்கள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி, மாண்புமிகு துணை முதலமைசசர் திரு.ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ப.தனபால், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி குமாரி இந்திரா பானர்ஜி ஆகியோர் மற்றும் பல்வேறு அரசு உயர் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**